**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 56/2024**

Deposition of the DW1

Name : கிறிஸ்டோபர் ராஜேஷ்

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 17.07.2026.

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதி. வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.

**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு இந்த வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேன் என்றால் செயல் படுத்தகூடிய ஆணைகள் மற்றும் கட்டிடம் முடிவு செய்ததை நேரில் சென்று ஆய்வு செய்தேன். கட்டிட வேலை எப்போது தொடங்கப்பட்டு எப்போது முடிவுற்றது என்றால் தேதி நினைவில்லை 2024 ல் தொடங்கி கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி விபரங்களை காட்டக்கூடிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2.மேற்படி கட்டிடத்தின் வரைபட அனுமதியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் எந்த திசையில் நாராயணகுரு சிலை உள்ளது என்றால் திசை தெரியவில்லை. எந்த சாலையில் கட்டிடம் கட்டப்படுட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சாலையில் நிளம் அகலம் குறித்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பட்டிகை சொத்தில் இருந்து திருமண மண்டபம் எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்றால் 100 மீ தூரத்தில் உள்ளது.

3. வழக்கு சொத்தில் இருந்து தபால் அலுவலகம் 200 மீ தூரத்தில் இருக்குமா என்றால் சரியல்ல, அருகில் உள்ளது. தாவா ரோட்டில் வழக்கு பட்டிகை கட்டிடம் போல் வேறு கட்டிடம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் இருப்பதை தெரிந்து நான் கட்டிட வேலையை நிறுத்தவில்லை என்றால் சரிதான், தடை உத்தரவு எதுவும் இல்லாததால் தொடர்ந்தோம். வாதியின் வீடு வழக்கு சொத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

4. வாதியின் வீட்டிற்கு பிரதான சாலையில் இருந்து தாவா சாலை வழியாகதான் வரவேண்டும் என்றாலும் வேறு பாதை இல்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தாவா இடத்தை பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா கட்டிடம் கட்ட வேண்டி அதிகம் மனுக்கள் வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கட்டிடம் கட்டக்கூடாது என்பதால் மனுக்கள் வந்தது என்றாலும் உண்மையில் கட்டிடம் கட்ட வேண்டி மனு வந்திருந்தால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. தாவா கட்டிடம் அருகே பள்ளிகூடமும் கோவிகளும் உள்ளதால் அது சுகாதார கேடை விளைவிக்கும் என்பதால் சரியல்ல, தாவா கட்டிடம் இல்லை என்றால் தான் பொது மக்கள் பொது இடத்தில் அசுத்தம் செய்து அதனால் சுகாதார கேடு ஏற்படும். தாவா கட்டிடத்திற் அருகே உள்ள கோவிலில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவிலில் கழிவறைகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா கட்டிடம் பொது மக்களுக்காக கட்டப்பட்டது. தாவா கட்டிடத்தால் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் இந்த வழக்கு வாதிகளின் செலவு

தொகையுடன் அனுமதிக்கபட வேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**